25.06.2024

O.S.No.202/2019

வா.சா.1.திரு.மீனாட்சி சுந்தரம் த.பெ.மகாதேவன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. எனக்கு எழுத படிக்கத் தெரியாது, கையெழுத்து மட்டும் போடத்தெரியும். நான் ஆத்திகுளம் பகுதியில் வசித்து வருகிறேன். தாவா சொத்து எனது பகுதியில் இருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. தாவா சொத்து கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல, கோபாலகிருஷ்ண பள்ளிக்கு பாத்தியப்பட்ட சொத்து. தாவா சொத்து கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்ட்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என எனது பிராதில் சொல்லி இருந்தால் அது தவறு. தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் கட்டுப்பட்ட சொத்து என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்து சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் கட்டுப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தினை நான் 2006 ம் ஆண்டு 11 வது மாதம் 27 ம் தேதி கிரையம் வாங்கியதாக சொல்லி இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் முத்துராமன் ஆசாரியிடம் இருந்து கிரையம் பெற்றதாக எனது பிராதில் சொல்லி உள்ளேன். எனது கிரைய ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது யாரிடம் உள்ளது என்றால் எனது வீட்டில் உள்ளது.

2. தாவா சொத்தினை நான் சர்வேயர் வைத்து அளந்து அத்துமால் செய்துகிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். பிளாட்டாக இருந்தது, நான் கிரையம் பெற்றேன். தாவா சொத்து காலியிடம் என்றால், ந்ரன வாங்கியபோது பிளாட் மனையாக இருந்தது. தற்போது அந்த பிளாட் கற்களை எல்லாம் இடத்துக்காரர்கள் பிடுங்கிவிட்டு, கம்பிமுள்வேலி அமைத்துள்ளார்கள். 2019 ம் ஆண்டு முள்வேலி அமைத்துள்ளார்கள். தாவா சொத்தில் ஒருகாலத்திலும் பிளாட் மனைகளாக பிரிக்கப்பட்டு கற்கள் ஊன்றப்படவில்லை என்றால் சரியல்ல, பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டிருந்ததில்தான் நான் கிரையம் வாங்கினேன். எதற்காக இந்த வழககினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2019 ம் ஆண்டு நான் தாவா சொத்திற்குள் நுழைய முற்பட்ட போது அதனை முள்கம்பிவேலி போட்டு அடைத்து விட்டதால் இந்த வழக்கினை தாக்கல் செய்தேன். 2019 ம் ஆண்டுக்கு முன்பே தாவா சொத்து முள்வேலி அமைக்கப்பட்டு இருந்தது என்றாலும், இந்த வழக்கிற்காக 2019 ம் ஆண்டு முள்வேலி அமைத்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல, நான் அவ்வப்போது சென்று பார்ப்பேன்.

3. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவிளையாட்டு மைதானத்தினை பொறுத்து நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த இடம் எனது இடமாக தெரியவில்லை, நான் எனது இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னைப் போன்று இன்னும் 12 நபர்கள் சர்வே எண்.169/1 சர்வே எண்.169/2 ல் கட்டுப்பட்ட சொத்திததிற்குள் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில காட்டப்பட்ட இடமும், இந்த தாவா சொத்தும் ஒன்றோடொன்று இணைந்தது என்றால் சரிதான். இதற்கு முன்பு மற்ற வழக்கில் சாட்சியம் அளித்துள்ளவர்கள் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள

சொத்தில்தான் தாவா சொத்து அமைந்துள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என்னைப்போன்று வழககு தாக்கல் செய்தவர்களுடன் சேர்ந்து அவ்வ்போது நாங்கள் வழககு சம்பந்தமாக பேசிக்கொள்வோம் என்றால் சரிதான். அய்யனார் என்பவரை எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். இளம்ஜி சௌந்திராஜன் என்பவர் அய்யனார் என்பவருக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் அசல் ஆவணத்தினை நான் நேரிடையாக பார்த்திதில்லை என்றால் சரிதான். இளம்ஜி சௌந்திராஜன் என்பவர் அய்யனார் என்பவருக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் சங்கதி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான்.

4. இளம்ஜி சௌந்திராஜன் என்பவர் அய்யனார் என்பவருக்கு 20.04.1996 தேதியில் கிரையம கொடுத்ததா கசொல்லப்படும் சங்கதி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான், அந்த அசல் ஆவணத்தினை நான் நேரிடையாக பார்த்தில்லை என்றால் சரிதான். இளம்ஜி சௌந்திராஜன் என்பவர் அய்யனார் என்பவருக்கு எந்த காலத்திலும் பொது அதிகார ஆவணமோ, கிரைய பத்திரமோ எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் மோசடியான ஆவணம் என்று பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களின் உண்மை தன்மையை நிருபிப்பதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். கோபாகலகிருஷ்ண பள்ளி சுமார் 50 ஆண்டுகள் பழமையான பள்ளி என்றால் சரதிான், அந்த பள்ளிகூடம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த பள்ளிகூடம் இயங்கி வருவது தற்போது வரை எனக்குதெரியும். அந்த பள்ளிகூடத்திற்கு விளையாட்டு மைதானம் உண்டு என்றால் சரிதான். தாவாசொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 விளையாட்டு மைதானமும், பள்ளி விடுதியும் உள்ளது என்றால் சரியல்ல. நான் பிளாட் எண்.24 கிரையம் பெற்றதாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். இந்த பிளாட்டினை என்னால் தற்போது அடையாளம் காட்ட இயலாது என்றால் சரிதான், அதனை மைதானமாக மாற்றி விட்டதால் என்னால் அடையாளம் காட்ட இயலவில்லை,

5. பிரதிவாதிகள் அனுமதி இல்லாமல் சர்வே எண்.169/1 சர்வே எண்.169/2 ல் அடங்கியுள்ள தாவாசொத்திற்குள் நுழைய முடியாது என்றால் சரிதான். முள்வேலி அமைத்து கேட்டு போட்டுள்ளார்கள். தாவா சொத்து சிறுதுார் கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். சிறுதுார்கிராம சொத்துக்களுக்கு சொக்கிகுளம் சார்பதிவாளர் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். 20.04.1996 தேதியிட்ட அய்யனாருக்கு இளம்ஜி சௌந்திராஜன் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் பெயரில் உள்ள கிரைய ஆவணம் கேரளா மாநிலம் பாறசாலை என்ற இடத்தில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். இளம்ஜி சௌந்திராஜன் கையெழுத்தினை மோசடியாக உற்பத்தி செய்து தாவா சொத்து அமைந்துள்ள பகுதியில் இயங்கி வரும் சொக்கிகுளம்சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யாமல் மோசடியாக கேரளா மாநிலம் பாறசாலையில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1 செண்டு நிலம் இளம்ஜி சௌந்திராஜன் பெயரில் கேரளா

மாநிலம் பாறசாலையில் இருந்ததாக நான் சொல்லி உள்ளதால், அதனை நான் நேரிடையாக பார்த்தில்லை என்றால் சரிதான்.

6. நான், லட்சுமி அம்மாளின் கணவர் முத்துராமன் ஆசாரியிடம் இ ருந்து கிரையம் வாங்கினேன். இந்த வழககின் பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தினை மோசடியாக நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம் என்று ஆட்சேபணை செய்துள்ளதால், அதன் உண்மை தன்மையை தெரிந்து கொள்வதற்கு எனக்கு கிரையம் கொடுத்த முத்துராமன் ஆசாரியையோ, அதற்கு முன்பு கிரையதாராக சொல்லப்படும் அய்யனாரையோ விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் முத்துராமன் ஆசாரி இறந்து போய்விட்டார், அய்யனாரை நான் பார்த்துள்ளேன். தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1, சர்வே எண்.169/2 க்கும் அய்யனாருக்கும் எந்த சம்பந்தமும், பாத்தியமோ இல்லை என்றாலும், அதேபோல் அய்யனார், லட்சுமி அம்மாளுக்கு எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் கிரைய ஆவணமும் மோசடியானது என்றாலும் அதன் அடிப்படையில் லட்சுமி அம்மாள் இறந்த பின்பு அவரது கணவரிடம்இருந்து நான் கிரையம் பெற்றதாக சொல்லப்டும் கிரைய ஆவணமும்மோசடியானது என்றால் சரியல்ல. அய்யனாரிடம் இருந்து லட்சுமி அம்மாள் கிரையம் பெற்றதாக சொல்லப்படும்கிரைய ஆவணத்தின் நகலை தாக்கல் செய்துளளேன் என்றால் சரிதான்.

7. தாவா சொத்து சர்வே எண.169/1 சர்வே எண்169/2 ல் கட்டுப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ-3 பட்டா சர்வே எண்.28/21 ல் கட்டுப்பட்ட சொத்துக்கானது என்றால் சரிதான். தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்களுக்கும் வா.சா.ஆ-3 ஆவணத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ-3 பட்டா பிரதிவாதிகளை விசாரித்து வழுங்கப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. என் தனிப்பட்ட செல்வாக்கினை பயன்படுத்தி பிரதிவாதிக்கு தெரியாமல் வா.சா.ஆ-3 மோசடியாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ-3 பெறுவதற்காக நான் அளித்த மனு மற்றும் அதன் நடவடிக்கைகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-4 முதல் வா.சா.ஆ-8 வரையான கிஸ்தி ரசிதுகளில் தாவாசொத்து சம்பந்தமான சர்வே எண்கள் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். காலியிடத்திற்கு வா.சா.ஆ-4 முதல் வா.சா.ஆ-8 வரையான ஆவணங்களில் கண்டுள்ள கிஸ்திரசிதுகள் கொடுப்பது வழக்கம் அல்ல என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ-4 முதல் வா.சா.ஆ-8 வரையான ஆவணங்கள் தாவா சொத்திற்கு தொடர்புடைய ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல, என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-11 லே அவுட் எனது கிரைய பத்திரத்துடன் இணைந்து இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-11 ஆவணம் பற்றி எனது கிரைய ஆவணத்தில் எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-12 ஆவணம் அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தின் நகல் என்றால் சரிதான், அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் சரிதான். சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் கட்டுப்பட்ட சொத்துக்களை தான் அளந்து

அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அவ்வாறு அளவீடு செய்தபோது என்னோடு வழக்கு தாக்கல் செய்த மற்ற 12 நபர்களும் இருந்தோம் என்றால் சரிதான். அந்த அறிக்கையில் மேற்படி சர்வே எண்ணில் கட்டுப்பட்ட சொத்துக்கள் பள்ளி மைதானமாகவும், விடுதியாகவும் உள்ளது என அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதனை பற்றி எனக்கு தெரியாது. அந்த அறிக்கையில் என்ன உள்ளது என்று நான் கேள்விபட்டேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தபோது யாரும் மறுப்பு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

9. 17.09.2019 தேதியில் தாவா சொத்தினை சுத்தம செய்தபோது பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்தார்கள் என்று இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாவட்ட நீதிமன்றத்தில் Trust O.P.No.35/1967 பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அந்த உத்தரவு எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். பள்ளி, கல்விதுறையிடம் அனுமதி பெற்றதாக சொல்லப்படும் சங்கதி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அதற்கான ஆவணத்தினை நான் பார்த்தில்லை என்றால் சரிதான். இளம்ஜி சௌந்திராஜன் ரூபாய்.50,000 இந்தியன் வங்கி ஊமச்சிகுளம் கிளையில் வைப்பீடு செய்ததாக சொல்லப்படும் சங்கதி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அதற்கான அசல் ஆவணத்தினை நான் பார்த்திதல்லை என்றால் சரிதான். அய்யனார் பெயரில் உள்ள 20.04.1996 தேதியிட்ட மோசடியான கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகளை அப்படியே எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லி உள்ளதால் அந்த சங்கதிகள் எனக்கு நேரிடையாக தெரியாது என்றாலும், இந்த வழககிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, பிரதிவாதிகளுக்கிடையே நடைபெற்றதாக சொல்லப்படும வழக்கு வவரம் எனக்கு நேரிடையாக தெரியாது.

10. சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவற்றில் கட்டுப்பட்ட சொத்துக்களை பிரதிவாதிகளுக்கு இடையே நடைபெற்ற வழக்குகளில் சொல்லவில்லைஎன்பதற்காக அந்த சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்று வாதிடுவது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து அய்யனார் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் மற்றும் பொது அதிகார ஆவணம், எனது முன்கிரையதாரர் என்று சொல்லப்படும் லட்சுமி என்பரது கிரைய ஆவணம், எனது பெயரில் உள்ள கிரைய ஆவணம் ஆகியவை மோசடியானது என்று குறிப்பிட்டு பிரதிவாதிகள் மறுத்துள்ள நிலையில் தாவா சொத்தில் எனது உரிமையை விளம்புகை செய்ய பரிகாரம கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியிருப்பது செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பள்ளிகூடம், கல்லூரி உள்பட நிறைய சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான், பிரதிவாதிகள் வசதியான குடும்பத்தினை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இளம்ஜி சௌந்திராஜன் என்பவர் வசதியான குடும்பத்தினை சேர்ந்தவர் என்பதால் அய்யனாருக்கு கிரைய ஆவணமோ, பொது அதிகார ஆவணமோ எழுதிக்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், இளம்ஜி சௌந்திராஜன் கையெழுத்தினை மோசடியாக உற்பத்தி செய்து, தாவா சொத்தினை கிரையம் செய்திருப்பதால் அந்த கிரைய ஆவணம் சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல.

11. தாவா சொத்து இன்றைய தேதி வரை பிரதிவாதிகள் கைவசம் உள்ளது என்றாலும், நானோ, எனது முந்தைய சுவான்தாரர்களோ தாவா சொத்தில் ஒருபோதும் அனுபவத்தில் இருந்ததில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லாமல் உண்மை சங்கதிகளை மறைத்து மோசடியாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.